[1986 மே 13

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முனவடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) திரையரங்குகள் (ஒழுங்குமுறைப்படுத்துதிருத்தச்) சட்டமுன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

[1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை ஆரம்ப ஸ்டேஜிலேயே நான் எதிர்க்கிறேன். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் தேர்தல்கள் நடந்ததற்குப் பிறகு மாநகராட்சித் தேர்தலகள் நடைபெறும் என்று சொன்னார்கள். ஆனால் அதைத் தள்ளி வைக்கும் வகையில இப்போது காம்ப்ரஹென்சிவ் பில கொண்டு வருகிறார்கள். அதற்காக சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட குழு போடுகிறோம் என்று சொல்கிறார்கள். எலக்டட் பாடி வேண்டும். ஆனால் தேர்தலைத் தள்ளி வைக்கத்தான் இப்படி சாக்கு போக்கு சொல்லி இவ்வாறு மசோதா கொண்டு வருவதால் நான் இதை எதிர்க்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் ஜனநாயகத்தைப் பற்றி ரொம்ப தூரம் விவாதம் பண்ணி பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி ஜனநாயகத்தை நிறைவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கிறோம் என்ற பெயரைச் சொல்லி தேர்தலை ஒத்திப் போடுவதற்கும், மக்கள் பிரதிநிதிகள் இருந்து நிர்வாகத்தை நடத்துவதற்கும் முடியாதபடி இருக்கக் கூடிய நிலைமையைத்தொடர்ந்து கொண்டு வருவதற்காகவும்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. ஆகவே இதை இன்ட்ரொடக்ஷன் செய்யக் கூடாது என்றும், இதைப் பின் வாங்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஏ. எஸ்.. ஏ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்பத்திலேயே ஜனதா கட்சி எதிர்க்கிறது. மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்குப் பல சட்ட திட்டங்களைப் போடுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் சேலம், திருச்சி, திருநெலவேலி, போன்ற நகராட்சிகளுக்கெல்லாம தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. அதைப் போல் தானே இதுவும். எனவே இந்த மாநகராட்சிகளுக்கும் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.